IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# THE SCRIPTURES TOWARDS CAIDWEII PRESENTING BHARATHA KANDA PURADHANA

**கால்டுவெல் நோக்கில் வேதங்கள் -**

**பரதகண்ட புராதனத்தை முன்வைத்து**

**முனைவர் கதி. முருகேசன் (கதிர்முருகு), உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, கணேசர் கலை அறிவியல் கல்லூரி, மேலைச்சிவபுரி, புதுக்கோட்டை மாவட்டம் - 622 403.**

**அலைபேசி: 8438460253, மின்னஞ்சல்: murugesankt04@gmail.com**

**Dr.KT.MURUGESAN (kathirmurugu)**

**Assistant professor, Department of Tamil**

**Ganesar College of Arts and Science, Melaisivapuri- 622403**

**Cell : 8438460253/ murugesanKt04@gmail.com**

## ஆய்வுச் சுருக்கம்

கிறித்தவ சமயத்தைப் பரப்பும் நோக்குடன் இந்தியாவிற்கு வருகை தந்த கால்டுவெல் விவிலியத்தை வட்டார மொழியில் கற்பிப்பதற்காகத் தமிழைக் கற்றார். தமிழ் மொழியின் மீது ஆர்வம் கொண்டு பரதகண்ட புராதனம், திருநெல்வேலிச் சரித்திரம், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் முதலான நூல்களைப் படைத்தளித்தார். அவர் படைத்த பரதகண்ட புராதனம் நான்கு பாகங்களைக் கொண்டது. முதல் பாகம் வேதங்கள் குறித்தும், இரண்டாம் பாகம்

இராமாயணம் குறித்தும், மூன்றாம் பாகம் மகாபாரதம் குறித்தும், நான்காம் பாகம் புராணங்கள் குறித்தும் அமைந்திருக்கின்றன. கால்டுவெல் வேதங்களுக்கெல்லாம் மூலமானது ரிக் வேதமே என்றும் அதிலிருந்தே யசுர், சாமம், அதர்வணம் ஆகிய வேதங்கள் தோன்றின என்றும் குறிப்பிடுகிறார். வேத காலத்தில் இந்திரன் மட்டுமே முதன்மையான கடவுள் என்றும் சூரியன், வாயு, உருத்திரன், திருமால் முதலானவர்கள் முதன்மையான கடவுளர்கள் அல்ல அவர்கள் தேவர்களாகவே முன் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள் என்றும் இந்து மதம் வேதங்களை அடிப்படையாகக் கொண்டதல்ல என்றும் தனது சிந்தனைகளை வேதங்கள் குறித்தப் பார்வையாக முன் வைத்திருக்கிறார்.

**குறிப்புச் சொற்கள்:** ரிக்வேதம், சமயம், சம்ஹிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதம், சிந்து கங்கைச் சமவெளி.

## The Scriptures Towards Caldwell

## Presenting Bharatakanda Puradhana

### ABSTRACT

Caldwell, who visited India with the aim of spreading Christianity, learned Tamil in order to teach the Bible in the vernacular. With his interest in the Tamil language, he authored books like Bharatakanda Purathanam, Tirunelveli Saritram, and comparison of Dravidian Languages etc. The Bharatakanda Purana composed by him consists of four parts. The first part deals with the Vedas, the second part deals with the Ramayana, the third part deals with the Mahabharata and the fourth part deals with the Puranas. Caldwell points out that the source of all the Vedas is the Rig Veda and from it emerged the Vedas Yasur, Samam and Atharvana. In the Vedic period, only Indra is the primary god and Surya, Vayu, Urudhiran, Tirumal etc. are not the primary gods but are presented as Devas. He puts forward the ideas that Hinduism is not based on the Vedas as his view on the Vedas.

**KEY WORDS**

Rigveda, Samayam, Samhita, Brahmana, Aranyakam, Upanishads, Indus-Gangetic plain.

**முன்னுரை**

இராபர்ட் கால்டுவெல் 1814 ஆம் ஆண்டு மே மாதம் 7 ஆம் நாள் அயர்லாந்தில் பிறந்தார். 28 ஆகஸ்ட் 1891 ஆம் ஆண்டு மறைந்தார். அவரது கல்லறை திருநெல்வேலி மாவட்டம் இடையன்குடியில் அமைந்திருக்கிறது. அவர் தனது 24 ஆவது வயதில் இலண்டன் மிசனரி சொசைட்டி என்னும் கிறித்தவ அமைப்போடு சேர்ந்து 1838 ஆம் ஆண்டு ஜனவரி 8 ஆம் நாள் சென்னைக்கு வந்து சமயப் பணியைத் தொடங்கினார். கிறித்தவ சமயம் பரப்புவதற்காகத் தமிழ் கற்ற அவர் சமயப் பணியோடு தமிழ்ப் பணியையும் செய்து வந்தார். திராவிட மொழியை ஆய்வு செய்து 1856 ஆம் ஆண்டு திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை வெளியிட்டார். இவரது படைப்புகளில் குறிப்பிடத்தக்கவை நற்கருணைத் தியானமாலை, தாமரைத் தடாகம், ஞானஸ்நானம், நற்கருணை, பரதகண்ட புராதனம் முதலானவை ஆகும். அவர் படைத்த பரதகண்ட புராதனம் வேதங்கள் குறித்த ஆழமான பார்வையாகவும் வேதங்களின் காலத்தை ஆராய்வதாகவும் வேதங்களின் நோக்கத்தையும் பிற்காலத்தில் வேதங்களில் ஏற்ப மாற்றங்களையும் ஆராய்வதாக அமைகிறது.

**வேதம் – விளக்கம்**

“வேதம் என்னும் சொல் வித் என்னும் வடமொழிச் சொல்லை வேராகக் கொண்டது. சமஸ்கிருதத்தில் இதற்கு அறிதல் என்பது பொருள். உயர்வான என்னும் பொருளும் உண்டு” (www.wikipedia.com) வேதங்கள் இறைவனால் உருவாக்கப்பட்டவை என்றும் எழுதாக்கிளவி என்றும் அழைக்கப்பட்ட ரிக், யசுர், சாமம், அதர்வணம் என்பன நால் வேதங்கள் ஆகும். இவை சதுர்வேதங்கள் என்று அழைக்கப்படுகின்றன. “வேதங்களுக்கு நான்கு பாகங்கள் உண்டு, அவை, சம்ஹிதை, பிராமணம், ஆரண்யகம், உபநிடதங்கள்” (மேலது) சம்ஹிதை என்பது மந்திரங்களின் தொகுப்பாகக் கருதப்படுகிறது. இவற்றைக் கடவுளர்கள் அருளியதாகக் கூறப்படுகிறது. பிராமணம் எனப்படுவது உரை அல்லது சடங்கு வழிமுறைகளைக் குறிக்கும். ஆரண்யகம் எனப்படுவது காட்டில் வாழும் முனிவர்களின் உரைகளைக் குறிக்கும். உபநிடதங்கள் வேதத்தின் முடிவாகக் கருதப்படுகின்றன. வேதங்களுக்கான உரைகள், தத்துவ விளக்கங்கள், எதிர்ப்புகள் முதலியன இதில் அடங்கும்.

**வேதங்களின் எண்ணிக்கை**

கால்டுவெல் “வேதம் என்கிற மொழிக்கு அறிவு என்றர்த்தம்” (பொ.வேல்சாமி, பரதகண்ட புராதனம், ப. 1) என்று வேதத்திற்கான பெயர் விளக்கம் தருகிறார். ஒவ்வொரு வேதமும் மந்திரம் என்றும் பிரமாணம் என்றும் இரண்டாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. தேவர்களைப் போற்றி வணங்கும் பாடல்களுக்கு மந்திரம் என்றும் அப்பாடல்களைத் திரட்டிய சங்கிரகத்துக்கு சங்கிதை என்றும் பெயர்.

காலப்போக்கில் வேதங்களின் பொருளை விளக்கப் பல நூல்கள் பாடப்பட்டு வேதத்தோடு சேர்க்கப்பட்டதை கால்டுவெல் பின்வருமாறு குறிப்பிடுகிறார். “தேவர்களைத் துதிக்கிற பாட்டுகளுக்கு மந்திரம் என்றும் அந்தப் பாட்டுகளைத் திரட்டின சங்கிரகத்துக்குச் சங்கிதை என்றும் பெயர். வேதப்பாட்டுகளின் கருத்து விளங்கும்படி பற்பல வியாக்கியானங்களும், உபதேசங்களும், கதைகளும், கற்பனைகளும் செய்யப்பட்டன. அவைகளைத் திரட்டின சங்கிரகம் பிராமணம் எனப்படும். வேதத்தின் அர்த்தத்தையும் யாகம் முதலிய சடங்குகளைச் செய்யும் வகையையும் பிராமணர் அறிவதற்கு உதவியாக அந்தச் சங்கிரகம் செய்யப்பட்டிருக்கிறபடியால் அதற்குப் பிராமணம் என்று பேர். பிராமணங்களைப் பார்க்கிலும் வேதத்திலுள்ள பாட்டுகள் அதிக பூர்வீகமுள்ளவை. பிராமணங்கள் செய்யப்பட்டதின் பின்பும் உலகமுண்டான வகையையும் ஆத்துமாவின் தன்மையையும், முக்தியையும் குறித்துப் போதகம் பண்ணும் படியாக சில பிரபந்தங்கள் செய்யப்பட்டு பிராமணங்களின் கடைசியில் வேதத்தோடே சேர்க்கப்பட்டன. அந்தப் பிரபந்தங்களுக்கு உபநிஷதங்கள் என்றும் ஆரணிகங்கள் என்றும் பேர்”(மேலது ப.1) வேதங்கள் மூன்று மட்டுமே உண்டு என்றும் யாகம் செய்யும் போது நடைபெற்ற தவறுகள் அவற்றைச் சரிசெய்வதற்கான மந்திரங்கள், எதிரிகளை வெற்றிகொள்ளத்தக்க மந்திரங்கள், நல்லவற்றை அடைய உதவும் மந்திரங்கள் ஆகியன அதர்வண வேதத்தில் அடங்கியிருக்கும் காரணத்தால் தொடக்ககாலத்தில் அதற்கு வேதம் என்று பெயர் இல்லை என்று கால்டுவெல் குறிப்பிடுகிறார்.

ரிக், யசுர், சாமம் என்னும் மூன்று வேதங்களில் ரிக் வேதம் பழமையானதாகும். யசுர், சாமம் ஆகிய வேதங்களுக்கு ரிக் வேதமே அடிப்படையாக அமைந்தது. ரிக் வேதத்தில் அமைந்திருக்கின்ற பாடல்களை யாகம் முதலான செயல்களைச் செய்வதற்கு ஒழுங்கமைத்த காரணத்தால் யசூர் வேதம் என்று பெயர் ஏற்பட்டது. இதற்கு யாக வேதம் என்னும் பெயரும் உண்டு. ரிக் வேதத்தில் உள்ள பாடல்களே யசுர் வேதத்திலும் அமைந்திருக்கின்றன. சில வேளைகளில் இசையோடு சேர்ந்து பாட வேண்டியிருந்த காரணத்தால் அதற்கு இராகங்களை உருவாக்கி சாம வேதம் என்று பெயரிட்டனர். ஆக, கால்டுவெல் கருத்தின்படி ரிக் வேதம் ஒன்றே மூலமானது என்றும் அதிலிருந்தே பிற வேதங்கள் தோன்றின என்பது தெளிவாகும்.

**கால வரையறை**

வேதங்கள் தோன்றிய காலம் குறித்துப் பல கருத்துகள் காணப்படுகின்றன. "இந்தியாவில் வேதகாலம் என்பது சமஸ்கிருத நூல்கள் இயற்றப்பட்டக் காலத்தைக் குறிக்கிறது. அக்கால நாகரிகம் வேதகால நாகரிகம் எனப்படுகிறது. சிந்து, கங்கைச் சமவெளியில் செழிப்பாக வளர்ந்த வேதகால நாகரிகத்தின் காலம் கி. மு. 1500 முதல் 500 வரை என வரையறை செய்யப்படுகிறது. (www.wikipedia.com) கால்டுவெல் இந்திய நாட்டில் தோன்றிய நூல்களில் மிகப்பழமையானது ரிக் வேதம் என்னும் கருத்தை முன் வைக்கிறார். "ரிக் வேதப் பாட்டுகள் இத்தேசத்து நூல்கள் யாவிலும் அதிக பூர்வீகமுள்ளவைகளாதலால், பூர்வகாலத்திலே இத்தேசத்தில் வாசமாயிருந்த இந்துக்களுடைய மதக் கொள்கையும் அவர்களுக்குள்ளே வழங்கின வழக்கங்களும் எப்படிப்பட்டவைகள் என்று அறிய வேண்டுமானால் ரிக் வேதப் பாட்டுகளை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ரிக் வேதமே அதிக பூர்வீகமுள்ளதென்று அதில் கண்டிருக்கிற பாஷை நடையினாலும் மற்றும் அநேக முகாந்தரங்களினாலும் அறியலாம்"(பொ.வேல்சாமி, முற்குறித்த நூல், பக். 2, 3) ரிக் வேதம் படைக்கப்பட்ட காலத்தைச் சரியாக வரையறை செய்ய இயலாவிட்டாலும் கிறித்து பிறப்பதற்கு முன் 1200 வருடங்களுக்கும் 800 வருடங்களுக்கும் இடையில் தோன்றியிருக்க வேண்டும் என்னும் யூரோப் சாஸ்திரிகள் கருத்தை முன் வைக்கிறார். கால்டுவெல் உலகில் தோன்றிய நூல்களில் கிறித்தவ வேதத்தில் அடங்கிய பழைய ஏற்பாடு மட்டுமே ரிக் வேதத்தை விடப் பழமையானது என்றும் பழைய ஏற்பாட்டில் உள்ள மோசேயின் ஆகமங்கள் கிறித்து பிறப்பதற்கு 1400 வருடங்களுக்கு முன் எழுதப்பட்டது என்றும், தாவீது ராஜா எழுதிய சங்கீதங்களும் கிறித்து பிறப்பதற்கு 1000 வருடங்களுக்கு முன்பு பாடப்பட்டவை என்று குறிப்பிடுகிறார். கால்டுவெல் தன்னுடைய கருத்துகளால் ரிக் வேதம் பழைய ஏற்பாட்டுக்குப் பிற்பட்டது என்றும், ரிக்வேதம் தோன்றிய பிறகு சில உபநிடதங்களும் பிராமணங்களும் கிறித்துவின் பிறப்பிற்குப் பின்பே தோன்றியிருக்க வேண்டும் என்னும் கருத்தையும் முன் வைக்கிறார்.

**வேதங்கள் பரவிய முறை**

தொடக்ககாலத்தில் வேதங்கள் எழுதப்படவில்லை. விசுவாமித்திரர், வசிஸ்டன், அகத்தியன் முதலான ரிஷிகள் வேதப்பாடல்களைக் கேட்டவர்கள் மட்டுமே ஆவர். படைத்தவர்கள் அல்ல. பிரம்மன் ஒரு பாடலைப் பாட ரிஷிகள் அதனை மனத்தில் பத்திரப்படுத்திக் கொண்டனர். பிற்காலத்தில் அப்பாடல்களைக் கேட்டு எழுதிய வித்துவான்கள் யாரிடமிருந்து கேட்டார்களோ அவர்களுடைய பெயரையே பதிவு செய்து வைத்தனர். ரிஷிகள் பாடியதாக அவர்கள் நினைக்கவில்லை. பாடல்களை ஆராய்ந்து பார்க்கும்போது அவற்றை ரிஷிகளே இயற்றியிருக்க வேண்டும் என்றும் அதற்கான காரணங்கள் உண்டென்றும் கால்டுவெல் குறிப்பிடுகிறார். சான்று: 1 -

"சிந்துக்கரையில் வாசம்பண்ணுகிற ஒப்பற்ற வல்லமையுடைய பாலிய அரசனை மனமகிழ்ச்சியோடே துதிக்கிறேன்" (மேலது. ப.5) சான்று – 2: "இந்திரனே அக்கினியே, நீங்கள் எனக்குத் தந்த தெளிந்த புத்தி வேறொருவராலும் எனக்குக் கிடையாது. அந்த வரம் பெற்று உங்கள் பேரில் இந்தப் பாட்டைக் கட்டியிருக்கிறேன்" (மேலது) இச்சான்றுகள் ரிஷிகளே பாடல்களை இயற்றியிருக்க வேண்டும். என எண்ணுதற்கான சான்றுகள் ஆகின்றன. இவ்வாறு ரிஷிகள் எழுதிய பாடல்களை அவர்களின் சந்ததிகள் பாதுகாத்து வந்தனர். பிற்காலத்தில் வித்துவான்கள் அவற்றைத் தேடித் தொகுத்து சங்கிதை என்று பெயரிட்டனர். இவ்வாறு தொகுத்தவர்கள் வேத வியாசர் எனப்பட்டனர். இச்சொல்லுக்கு வேதங்களைத் திரட்டியவர் என்பது பொருள். வேதப் பாடல்கள் குரு சொல்ல சீடர்கள் மனப்பாடம் செய்துகொள்ளும் முறையிலேயே பரவி வந்தன. வேதங்களை எழுதாமல் மனப்பாடம் செய்யும் முறையினால் கேள்வி என்னும் பொருள் பொதிந்த ஸ்ருதி என்னும் சொல்லால் அழைக்கப்பட்டது.

**வேத காலக் கடவுள்**

வேத கால இந்துக்கள் சிவன், பிரம்மா, திருமால் ஆகியோரையும் பிற வலிமை வாய்ந்த தெய்வங்களையும் வணங்காமல் வானம், அக்கினி, சூரியன், காற்று முதலான பூதங்களை வணங்கினார்கள். இந்திர வழிபாடு சிறப்புற்று இருந்தது. இந்திரன் என்னும் சொல்லுக்கு 'வானம்' என்பது பொருள். உலகம் நிலைபெற்று விளங்க வானமே முழுமுதல் காரணமாகும். மழையைத் தோற்றுவிப்பவன் இந்திரன் என்றும் மழை பெய்ய அவனே காரணம் என்றும் எண்ணினார்கள். அவனை வலிமை வாய்ந்த தெய்வமாகவும் எண்ணினார்கள். "மழை பெய்கிறதற்கு வானமே காரணமென்று சனங்கள் எண்ணினபடியால் மழை பெய்யப்பண்ணின இந்திரனை (அல்லது வானத்தை) எல்லாத் தேவர்களிலும் பிரதான தேவனென்று எண்ணினார்கள். இந்திரனைக் குறித்துச் சொல்லிய விசேஷங்களில் அவன் மழையைப் பெய்யப் பண்ணுகிறதே சனங்களுக்கு முக்கியமான விசேஷமாய்க் காணப்பட்டது. அவனை மழை பெய்யப் பண்ணுகிறவனென்று அவர்கள் துதித்து வருகையில், மழை பெய்யாத மேகத்தை அவர்கள் ஒரு அசுரனாக எண்ணி, மழை பெய்யப்பண்ணும்படி இந்திரன் ஏற்பட்டதை அவன் அந்த மேக அசுரனோடே யுத்தஞ் செய்யப்போனதாக வருணித்து, வச்சிரமாகிய இடியைக்கொண்டு அவன் மேகத்தைப் பிளந்து அந்த அசுரனைக் கொன்றதினாலே பெரு மழை பெய்ததாக அவர்கள் சொல்லி, இந்த எண்ணத்துக்குத் தக்கதாய் அநேகம் பாட்டுக்களைக் கட்டினார்கள். அந்த மேக அசுரனோடே செய்த யுத்தத்தில் இந்திரன் செயங்கொண்டபடியினாலே வரவர அவனை யுத்தஞ் செய்கிறவர்களுக்குச் செயங்கொடுக்கிற தேவனாகவும் சமஸ்கிருதம் பேசின சனங்களாகிய ஆரியருக்குச் சத்துருக்களாயிருந்த காட்டு மனிதரைச் சங்கராஞ் செய்கிற

தேவனாகவும் காட்டி அவர்கள் அவனை அதிகமதிகமாய் வணங்கி வந்தார்கள்" (மேலது. ப.9, 10)

இப்போது வழக்கில் இருக்கும் சிவன், பிரம்மா, திருமால் ஆகியோர் தேவர்களாக மட்டுமே போற்றப்பட்டார்கள் என்றும் ஐம்பூதங்கள் வணங்கப்பட்டன என்றும் ஐம்பூதங்களுக்கு மனிதப் பண்புகளைக் கொடுத்து வழிபட்ட வழக்கம் நிலவியது என்றும் ரிக் வேதப் பாடல்கள் சான்று பகர்வதாகக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். இக்காலத்தில் 'சோமம்' என்னும் பூண்டிலிருந்து ஒரு வகையான கள்ளை உருவாக்கிக் குடித்ததனால் களிப்பு உண்டாக அதனையும் ஒரு தேவனாக எண்ணி வணங்கினார்கள். அவர்கள் வணங்கியது அதிசயமான சொற்களே அன்றி பொருள்கள் அல்ல என்று கால்டுவெல் குறிப்பிடுகிறார். இயற்கையை மனிதப் பண்புகளோடுப் பொருத்திப் பார்த்த வேதகாலச் சிந்தனைக்கு கால்டுவெல் காட்டும் சான்றுகளுள் சில பின்வருமாறு: சான்று – 1: "இந்திரனே, நீ மேகங்களின் தலையீற்றை இரண்டாக வெட்டினதினாலே மோசக்காரரின் வஞ்சனைகளை அழித்தாய், அப்பொழுது நீ சூரியனையும், உதயத்தையும், ஆகாசத்தையும், செனிப்பித்து (தோன்றப் பண்ணி) உன்னை எதிர்க்கத்தக்க சத்துரு ஒருவனாயினும் மீதியாய் இராதபடி செய்தாய்" (மேலது. ப.11) சான்று – 2: பலத்தினால் உற்பத்தியாகி தேவர்களை அழைக்கிறவனும் ஆராதனை செய்கிறவர்களின் தூதனுமாகிய சாகாத அக்கினியானவன் தீவிரமாய்ப் புறப்படுகிறான். அவன் ஏற்ற வழிகளாய்ச் சென்று ஆகாசத்தைத் தோன்றப்பண்ணி யாகத்திலுள்ள பலிகளினாலே தேவர்களைப் பூசிக்கிறான்" ( மேலது. ப.12 )சான்று – 3: யுக்தியுள்ள உதயமானவளுடைய விலாசமான இரதம் பூட்டியிருக்கிறது. சாகாத தேவர்கள் அதில் ஏறியிருக்கிறார்கள். எவரும் வியாப்பிக்கிற மேன்மையுள்ள குடியிருப்புகளுக்கு ஆரோக்கியத்தைக் கொண்டு வந்து கொடுக்கிறான்" (மேலது. ப.13) மேற்கண்ட சான்றுகளால் வேதப்பாடல்கள் இறை வணக்கப் பாடல்களாகவே அமைந்தன என்பதைத் தெளிவாக உணர்ந்துகொள்ள முடிகின்றது. "வேதங்களில் கூறிய பஞ்ச பூதத் தேவர்கள் உண்டானதற்கான காரணம் ஐம்பூதங்கள் குறித்து மக்கள் கொண்ட அதிசய எண்ணமே என்றும் அவற்றை மும்மூர்த்திகளோடு சேர்த்துக் கதை புனைந்தது அறியாமை என்றும் கால்டுவெல் குறிப்பிடுகிறார்" (மேலது. ப.16)

### ரிக் வேதத்தின் நோக்கம்

ரிக் வேதப் பாடல்கள் யாகம் செய்யும்போது தேவர்களை வாழ்த்திப் பாடப்பட்டன. அப்போது வேள்வியில் பலிப்பொருள்களையிட்டு வழிபடுவார்கள். யாகத்தில் சோமபானத்தைத் தேவர்களுக்கு என்று ஊற்றி மற்ற பாகத்தை வேள்வி ஆசிரியர்கள் அருந்துவார்கள். அக்காலத்தில் கோயில்கள் இல்லை. பல்வேறு தலங்களுக்குப் பயணம் செய்து வழிபாடு நடத்துவது இல்லை. இவையெல்லாம்

பிற்கால வழக்கங்கள். எனவே, ரிக் வேதப் பாடல்கள் தேவர்களை வழிபடுவதற்காக இயற்றப்பட்டவை என்பது தெளிவாகும்.

### பலியிடுதல்

வேள்வி ஆசிரியர்கள் யாகம் வளர்க்கும்போது நெய், சோமபானம் ஆகியவற்றை வேள்வியில் இட்டு வழிபடும் வழக்கம் இருந்தது. நரபலி கொடுக்கும் வழக்கமும் இருந்தது என்பதை அறிய முடிகிறது. மனிதன், குதிரை, மாடு, செம்மறியாடு, வெள்ளாடு, அரிசி ஆகியவை பலிப்பொருள்களாக இருந்தன என்று, ரிக் வேதத்தைச் சேர்ந்த பிராமணத்தில் சொல்லப்பட்டு இருப்பதாகக் கால்டுவெல் குறிப்பிடுகிறார். குதிரையைப் பலி கொடுப்பது அசுவமேதம் எனப்பட்டது. குதிரையைத் துண்டு துண்டாக வெட்டி நெருப்பில் இட்டனர். சில காலம் குதிரையைக் கொல்லாமல் பலியிடுவதைப் போன்ற பாவனைச் சடங்கும் நடைபெற்றது. வேத காலத்தில் மாமிசம் உண்ணும் வழக்கம் இருந்தது என்பதைப் பின்வரும் சான்றால் அறியலாம். "ரிக் வேதத்திலுள்ள அசுவமேதப் பாட்டுகளைப் பார்க்குமளவில் தகனிக்கப்பட்ட குதிரையின் மாமிசத்தை ஆசாரியரும் மற்ற ஜனங்களும் புசித்ததாக நிச்சயமாய் விளங்குகிறது. திருஷ்டாந்தரமாக, முதலாம் மண்டலத்திலுள்ள 162 ஆம் சூக்தத்தில் அசுவமேத யாகத்திற்குரிய குதிரையைக் குறித்துச் சொல்லியிருக்கிறதாவது, 'சமையல் பண்ணின குதிரையிறைச்சியைப் பார்வையிடுகிறவர்கள், நல்ல வாசனையாயிருக்கிறது, தாவென்று சொல்லுகிறவர்கள், அதின் மாமிசத்தைப் பிச்சையாகக் கேட்கிறவர்கள் இவர்களெல்லாரும் செய்கிறது எங்களுக்கு அநுகூலமாயிருப்பதாக' என்று சொல்லியிருக்கிறது. தேவர்களும் பலிகளைப் புசித்து தைரியம் அடைந்ததாகவும், அவர்கள் சோமபானத்தைக் குடித்து அதின் வெறியினாலே சந்தோஷப்பட்டதாகவும் பல பாட்டுகளில் சொல்லியிருக்கிறது. திருஷ்டாந்தரமாக ஐந்தாம் மண்டலத்திலுள்ள 29-ஆம் சூக்தத்தில் இந்திரனைத் துதிக்கையில், 'இந்திரனே, நீ முந்நூறு எருமைகளின் மாமிசத்தைப் புசித்து, மூன்று பானைகளிலுள்ள சோமபானத்தைக் குடித்தபோது விருந்தினரோடே யுத்தஞ் செய்யும்படியாகத் திருப்தியாய்ப் போஜனம் செய்த உன்னைத் தேவர்களெல்லாரும் கூப்பிட்டார்கள்' என்று சொல்லியிருக்கிறது." (மேலது. ப.18)

### மக்களின் வேண்டுதல்

ரிக் வேதப் பாடல்களைக் கொண்டு தேவர்களை வழிபட்ட மக்கள் உணவு, உடல்நலம், செல்வம், மக்கட்பேறு, ஆடுமாடுகள், குதிரைகள், தீய சக்திகளிடமிருந்து பாதுகாப்பு, எதிரிகளை வெல்லுதல், உலக நன்மை ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டனர். இத்தகைய கருத்துக்கள் சூரியன் மற்றும் வருணன் குறித்துப் பாடிய பாடல்களில் மிகுதியாகக் காணப்படுகின்றன.

**வேத காலம் – தற்காலம்**

வேதகால வழிபாட்டு முறைக்கும் தற்கால வழிபாட்டு முறைக்கும் மிகுதியான வேற்றுமை காணப்படுவதை அறிய முடிகிறது. அவர்கள் அறிந்த எல்லாம் பஞ்ச பூதங்கள் மட்டுமே. மும்மூர்த்திகளும் அவர்கள் செய்யும் தொழில்களும் ஓம்காரம் என்னும் மந்திரமும் அக்கால வழக்கத்தில் இல்லை. ரிக் வேதத்தில் கிடைத்திருக்கும் 1028 பாடல்களிலும் சிவன், பார்வதி, உமையம்மை, துர்கை, பிள்ளையார், சுப்பிரமணியர், வீரபத்திரன், வைரவன், அய்யனார், லிங்கம், விபூதி, ருத்ராட்சம், இராமன், இலட்சுமி, அனுமன், திருமாலின் அவதாரங்கள், நாமம், துளசி, கையலாயம், வைகுண்டம், சிவனடியார் என்னும் சொல் வழக்குகள் காணப்படவில்லை. பிராமணர் என்னும் பெயர் சாதியைக் குறிக்காமல் செய்கின்ற தொழிலைக் குறித்தது. பசுக்களைப் பலிகொடுத்து அதன் மாமிசத்தை உண்ணவும் செய்தார்கள். இதற்குச் சான்றாக, ரிக் வேதம் 2ஆம் மண்டலம் ஏழாம் சூக்தத்தில் இடம்பெறும் "விஷேஷித்த திவ்விய போஜனம் பசுக்களே" (மேலது 20) என்பதை எடுத்துக்காட்டுகிறார்.

**முடிவாக**

ரிக் வேதப் பாடல்கள் தேவர்களைப் போற்றும் நோக்கில் பாடப்பட்டவை என்றும், ரிக் வேதத்திலிருந்தே பிற வேதங்கள் தோற்றம்பெற்றன என்பதையும் அறிய முடிகிறது. வேத கால மக்களின் சிந்தனையில் உருவ வழிபாடு இல்லை. அவர்கள் தங்களின் அமைதியான வாழ்க்கைக்காக மட்டுமே வழிபாடுகளை மேற்கொண்டனர் என்பதை அறிய முடிகிறது. யாகங்கள் நடத்துவதும் உயிர்களைப் பலி கொடுப்பதும் மாமிசம் உண்பதும் சோமபானம் அருந்துவதும் பெரு வழக்காக இருந்தது என்பதை அறிய முடிகிறது. தற்போது வழக்கிலிருக்கும் இறை வழிபாட்டு முறைகள் எதனையும் ரிக் வேதம் குறிப்பிடவில்லை. இந்து மதத்திற்கு நான்கு வேதங்களே அடித்தளம் என்பதை மறுத்து இந்து மதத்திற்கு அடித்தளமாக எந்த வேதமும் இல்லை என்னும் செய்தியைக் கால்டுவெல் வேதங்கள் குறித்தப் பார்வையாக முன் வைக்கிறார்.

**துணை நூல்**

வேல்சாமி, பொ , (ப ஆ), பரத கண்ட புராதனம், சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 2020

**இணையம்**

www. wikipedia. com - வேதங்கள்

**Bibliography**

Veluchamy , P (Ed.) Bharadha kanda Puradhanam , Chennai: NCBH , 2020

**Online Source**

www. wikipedia.com - Vedhas